**மாலிம்பட பிரதேச சபை - 2022**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மாலிம்பட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மாலிம்பட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 625,000 பெறுமதியான கப் வண்டி பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் இது வரை அப்புறப்படுத்தி இருக்காததுடன் அதன் பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,522,918 இற்கான தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பலவினச் செலவுகள் ரூபா 134,083 தொகைக்காக பலவினக் கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | கடந்த ஆண்டு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த 02 செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய செலவுகள் இரு தடவைகள் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 834,091 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (உ) | முன்னைய ஆண்டின் போது சபையினால் நிறைவேற்றப்பட்டிருந்த பல்வேறு செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய செலவு ரூபா 907,071 தொகைக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | முன்னைய ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான கல்என்குட்டிய சனசமூக நிலையம் நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் மீளாய்வாண்டு இறுதியளவில் மூலதனப்படுத்தும் போது ரூபா 568,145 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டிற்குரிய பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 15,511,550 தொகை பெற வேண்டிய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | 2013 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சபையின் அமைய/ பிரதியீட்டு ஊழியர்களுக்காக செலுத்த வேண்டியிருந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 3% பங்களிப்பு என ரூபா 316,500 தொகை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | நிலையான சொத்துக்கள் தன்மையில் காணப்படாத ரூபா 107,040 பெறுமதியான 29 பொருட் பதிவேட்டுப் பண்ட விடயங்கள் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய கூட்டுத்தொகை ரூபா 348,309,259 தொகைக்கான 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 1,027,653 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | | எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இருப்புப் பதிவேடு மற்றும் விரிவான அட்டவணைகள் ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 5,272,465 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 104(4) | 2022 ஆண்டின் போது சபைக்குக் சொந்தமான பெக்கோ லோடருக்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக நி.பி. 104(4) இற்கு இணங்க இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி. 104(4) இற்கு இணங்க விசாரணைக் குழு ஒன்று நியமனம் செய்யும் படி உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் வேண்டப்பட்டுள்ளது என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினால் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 8,459,120 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 9,740,481 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீட்டு வருமானம் ரூபா | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா | 2021 மதிப்பீட்டு வருமானம் ரூபா | 2021 சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| i. வீதவரி மற்றும் வரி | 3,935,700 | 262,074 | 304,902 | 132,894 | 3,934,500 | 993,730 | 942,960 | 175,722 |
| ii. வாடகை | 7,647,500 | 2,883,350 | 3,481,238 | 228,401 | 6,721,000 | 2,467,485 | 2,155,375 | 826,289 |
| iii. அனுமதிப் பத்திரக் கட்டணம் | 907,000 | 1,239,140 | 1,337,940 | 128,200 | 777,000 | 991,425 | 902,425 | 227,000 |
| iv. ஏனைய வருமானங்கள் | 4,626,400 | 4,223,865 | 4,518,905 | 200,432 | 7,864,400 | 4,668,375 | 4,172,903 | 495,472 |
| மொத்தம் | 17,116,600 | 8,608,429 | 9,642,985 | 689,927 | 19,296,900 | 9,121,015 | 8,173,663 | 1,724,483 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 168,919 தொகை காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு 116 வீதவரி அலகுகள் தொடர்பாக ரூபா 124,545 நிலுவை மீதியொன்ற காணப்பட்டது. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134 இற்கு இணங்க சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு 2022 செப்தெம்பர் 30 திகதி 2300 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் குறிப்பிட்ட பிரதேசங்களில் இருந்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆளுனரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 43 கடைகள் காணப்பட்டதுடன், 14 கடையறைகளில் இருந்து ரூபா 160,650 இற்கான நிலுவை வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. அவற்றில் 03 கடைகளில் இருந்து | தவணைகளாக பணம் அறவீடு செய்யப்பட்டு வருகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 25,000 விட மிகையான மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. | | |
| (ஈ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 12 அறிவித்தல் பலகைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 316,500 மீளாய்வாண்டளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட நிலுவை அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 723,635 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 36,086,509 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரமாகும் குப்பைகள் உக்கக் கூடிய மற்றும் உக்காதவை என வகைப்படுத்தாமல் சேகரிக்கப்படும் காரணத்தினால் குப்பையை வகைப்படுத்துவதற்காக சபையின் தொழிலாளர்களை ஈடுபடுத்தி இருந்ததுடன், உக்காத குப்பைகளை இடுவதற்காக சூழல்நேய செய்முறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. | தேகாரோக்கிய நிலம் நிரப்புதல் போன்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட செய்முறை ஒன்று பரீட்சிக்கப்பட்டு வருகின்றது எனவும் பொலிதீனை அழிப்பதற்காக தேவைப்படும் waste incinerator இயந்திரம் ஒன்று விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | முறையான குப்பை முகாமைத்துவத் திட்டம் ஒன்று செயற்படுத்த வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் கடமைகள் மேற்கொள்ளும் நாளாந்த/ பிரதியீட்டு ஊழியர்களுக்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய 3% பங்களிப்புத் தொகை செலுத்தாமையால் 2013 ஆகஸ்ட் | சபையினால் செலுத்தப்பட்டிருந்த மீளளிப்புத் தொகையினை மீண்டும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | பங்களிப்புத் தொகை உரிய முறையில் செலுத்தப்பட வேண்டியதுடன், நட்டம் தொடர்பாக நி.பி. 156 இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மாதம் முதல் 2022 ஆகஸ்ட் மாதம் வரையான காலப் பகுதி தொடர்பாக ரூபா 376,930 இற்கான மிகை விதிப்புத் தொகையொன்று சபையினால் செலுத்த நேரிட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய மற்றும் PR/01/01 இலக்கங் கொண்ட சுற்றறிக்கைக்கு இணங்க வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் மீளாய்வாண்டின் போது வீதி விளக்கு பராமரிப்புக்காக மின்சாரத் துணைக் கருவிகள் கொள்வனவு செய்வதற்கான ரூபா 1,022,750 இற்கான செலவொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுக் காணப்படாமையால் கொடுப்பனவு நிறுத்தப்படுவதற்கு நேரிட்டது என மின்சார சபையினால் அறிவிக்கப்பட்டிருந்தது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் பாதை ஒன்று தடைப்படக் கூடிய விதமாக முறையான அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த மதில் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜுலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆவது அட்டவணைக்கு இணங்க நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முறையான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்று இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.4 சர்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கங் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரிவு 02 (iv) இற்கு புறம்பாக விரலடையாள இயந்திரத்தின் மூலம் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல்களை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது 56 நாட்களுக்காக இரண்டு உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை நாள் சம்பளம் என ரூபா 122,108 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் காலப் பகுதியில் விரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகள் இராஜாங்க அமைச்சின் 2021 பிரதேச சபை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 17,804,377 இற்கான மதிப்பீட்டுப் பெறுமதியை கொண்ட 04 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 3,626,711 இற்கான முடிவுற்ற வேலைப் பகுதி மேற்கொள்ளப்பட்டு நிர்மாண வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதிகளும் அழிவடைந்து காணப்பட்டதுடன், நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டதனால் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக முடியாமல் இருந்தது. | ஏற்பாடுகள் பொது நிருவாக, உள்நாட்டு விவகார, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | செயற்திட்டம் விரைவாக செயற்படுத்தப்பட வேண்டும். |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் வேலை வெளிக்கள தொழிலாளர்கள் இருவருக்கு மற்றும் சுகாதார தொழிலாளருக்கு பதவிக்கு உரிய கடமைகள் சாட்டப்படாமல் அலுவலக கடமைகள் மற்றும் ஏனைய கடமைகள் காட்டப்பட்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,246,076 இற்கான தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. | வெற்றிடங்கள் காணப்படும் பதவிகளின் கடமைகள் சாட்டப்பட்டது என. | பதவிக்குரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். |